**செய்தி வெளியீடு எண்: 357** **நாள்: 23.02.2024**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமார், தேர்தல் ஆணையர், திரு. அருண் கோயல் மற்றும் இந்திய தேர்தல் ஆணையத்தின் பிற உயர் அதிகாரிகள் தலைமையில், 2024 ஆம் ஆண்டு மக்களவை பொதுத் தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாட்டில் இரண்டு நாட்களுக்கு (23 மற்றும் 24 பிப்ரவரி, 2024) சென்னை டிரைடென்ட் ஹோட்டலில் நடைபெறுகிறது.

கூட்டத்தின் முதல் நாளில்(23.02.2024) மாநில மற்றும் தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட 10 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான கூட்டத்தில் தேர்தல் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் குறித்த தங்கள் கருத்துகளை அரசியல் கட்சி பிரதிநிதிகள் அளித்தனர். அந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், காவல் கண்காணிப்பாளர்கள், காவல் ஆணையர்கள், சரக காவல் துறைத் தலைவர்கள், மண்டல காவல் துறைத் துணை தலைவர்களுடன் மற்றொரு ஆய்வுக் கூட்டமும் நடத்தப்பட்டு மக்களவை தேர்தல் 2024–க்கான தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் இரண்டாம் நாள் (24.02.2024) ஆய்வின்போது தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் கேரளா மாநிலங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் மற்றும் மாநில காவல் ஒருங்கிணைப்பு அலுவலர்களுடான கூட்டமும், மத்திய மற்றும் மாநில செயலாக்கத்துறை அலுவலர்களுடனான தேர்தல் செலவின கண்காணிப்பு குறித்த கூட்டமும் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் தலைமைச் செலயாளர், காவல் துறைத் தலைவர், தேர்தல் பணியுடன் தொடர்புடைய அனைத்து துறை செயலாளர்களுடனான கலந்தாய்வுக் கூட்டமும் நடைபெறவுள்ளது. பிறகு மாலை 03.00 மணியளவில் பத்திரிக்கையாளர் சந்திப்புடன் தேர்தல் ஆணையத்தின் தேர்தல் முன்னேற்பாடுகளுக்கான ஆய்வுக் கூட்டம் நிறைபெறவுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in